மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், மங்கநல்லூர் அருகே வீரசோழன் ஆற்றின் குறுக்கே கண்டமடை வாய்க்கால் தலைப்பில் ஒரு பெட்டாம் கட்டுவதற்கு கருத்துரு ஆய்வில் உள்ளது.

வெள்ளாற்றின் குறுக்கே அணை.

29—(*வினா எண் 12616) திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுக்கா, அரிமளம் மாமடக்கி கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், அரிமளம் மாமடக்கி கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ரூ. 36.30 இலட்சத்தில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் நிறைவேற்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. த. புஷ்பராசு : தலைவர் அவர்களே, இந்த அணை கட்ட வேண்டுமென்று நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. தற்சமயம் இந்த அணை கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு உண்மையில் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், பெருமுயற்சி எடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். விரைவாக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, அந்த மக்களுக்குச் சேவை செய்கின்ற அளவிற்கு இந்த அணைக்கட்டு வேலைகள் துரிதப்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1987 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-9-1987-ல் இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 36.30 லட்சம் நிதியை இதற்கு ஒதுக்கீடு செய்து, டிசம்பர் 1988-க்குள் பணியை முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு நாங்கள் உத்திரவிட்டு இருக்கிறோம். விரைவில் பணி முடிக்கப்படும்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. த. புஷ்பராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் புதுக்கோட்டைக்கு வர இருப்பதாகச் சொல்லுகின்றார்கள். அப்படி வருகின்றபோது இந்த அணைக்கட்டுத் திட்டம் தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரோடு பேசி முடிவு எடுக்கப்படும்.

திருமணஞ்சேரியில் அணை கட்டும் திட்டம்.

30—(*வினா எண் 13785) **திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமணஞ்சேரியில் அணை கட்டுகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பு எவ்வளவு?

(இ) இந்தத் திட்டத்தின் மூலம் எத்தனை ஏக்கர் பலன் அடையும்?

(ஈ) கந்தர்வகோட்டை ஒன்றியத்தில், வெள்ளாள விடுதி, ஆத்தாங்கரை விடுதி, துவார், மானிய வயல் ஆகிய இடங்களில் செக்டாம் அமைக்கப்படுமா?